1.(ஆ) இந்து கூட்டுக் குடும்பம் **40x1=40**
2.(இ) துறைமுறை அமைப்பு
3.(அ) விரைவாக
4.(அ) பூரண நல்ல நம்பிக்கை
5.(இ) 1932 சட்டம்
6.(ஈ) நிறுவனம்
7.(ஈ) சட்டமுறை நிறுமம்
8.(அ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு
9.(இ) 7
10(அ) 90 நாட்கள்
11.(இ)நிறுமச்செயல்முறைவிதிகளில் பெயர் குறிப்பிடுவதால்
12.(ஆ) 5
13.(இ) இயக்குநர் அவையால்
14.(அ) முதன்மைச் சந்தை
15.(ஆ)இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியச்சட்டம்
16.(ஆ) கரடி
17.(அ) இங்கிலாந்து
18.(ஆ) திருப்பி செலுத்தக் கூடியது
19.(அ) அரசு நிறுமம்
20.(ஆ) துறைவாரி அமைப்பு

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. பொதுக்கூட்டுரு / பொதுக்கழகம்
22. நுகர்வோர்
23. ஒப்புக்கொண்ட விகிதம்
24. வரையறாப் பொறுப்பு
25. இணைவினை
26. நிறுவனக் கலைப்பு
27. 5000
28. தகவலறிக்கை
29. குவிமுன்னுரிமைப் பங்குகள்
30. சிறப்புத் தீர்மானம்
31. உரிமையாளர்கள்
32. 15
33. வெளியீட்டகங்கள்
34. பட்டியலிடுதல்
35. பரஸ்பர நிதி
36. இராபர்ட் ஓவன்
37. சிறுதொழில் உற்பத்தியாளர்கள்
38. பொதுச்சேவை / பொதுநலன்
39. தனியார்
40. தனியாள்

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41.அமைப்பு ஊர்விக் & ஹன்ட்** - ஒரு வியாபார நிறுவனம் என்பது சமுதாயத்தின் மற்ற உறுப்பினர்களின் தேவைக்காக அளிக்கும் சக்தியை பெற்றுக்கொண்டு ஒரு பொருளையோ அல்லது சேவையையோ உற்பத்தி செய்து பகிர்ந்தளித்து செயல்படக்கூடிய அமைப்பாகும். **லூயிஸ் எச். ஹேனே** – பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக இணக்கமான சிறப்பு வாய்ந்த பகுதியினை சரிக்கட்ட கூடியதொன்றாகும்.

**42.வாரிய அமைப்பு:** மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. TWAD TNEB TNHB

**43.தனியாள் வணிகர்:** தனிநபரால் உருவாக்கப்பட்டு, மேலாண்மை செய்யும் வணிக அமைப்பிற்கு தனிவணிக அமைப்பு என்று பெயர். அதை எவர் மேலாண்மை செய்கிறாரோ அவரே தனி வணிகர். இத்தொழிலில் கிடைக்கும் இலாபம் முழுவதும் அவரையேச் சேரும். அதுபோல் நட்டம் முழுவதும் அவரே ஏற்க வேண்டும்.

**44 வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை:** ஒரு கூட்டாண்மையில் கூட்டாளிகள் பொறுப்பு வரையறுக்க பட்டிருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும்.இந்தியாவில் இத்தகைய கூட்டாண்மை உருவாக்க சட்டம் அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இவ்வகை கூட்டாண்மை அனுமதிக்கப்படுகிறது.

**45.கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு:** கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய தொகையை அனைத்து கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து பெறுவது - **கூட்டுப்பொறுப்பு** ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்தின்மீது வழக்கு தொடுத்து பெறுவது – **தனிப்பொறுப்பு**

**46.குறுமபங்கொப்பம் பெறவில்லையெனில் ஏற்படும் விளைவு:** தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தளவு பங்கெடுப்புத் தொகையை ரொக்கமாகப் பெறாவிடின் விண்ணபத்தின் மீது பெற்ற பணம் முழுவதையும் திருப்பித் தருதல் வேண்டும். பங்குகளை ஒதுக்கீடு செய்தல் கூடாது.

**47. பங்குகளை வட்டத்தில் வெளியீடுதல் :** பங்குகளை அவற்றின் முகமதிப்பிற்கும் குறைத்து வெளியிடப்படுதல் வட்டத்தில் வெளியிடுதல் ஆகும். உ-ம் பங்கொன்றின் முக மதிப்பு ரூ10 எனவும் அது ரூ 8 க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குவெளியீட்டு தள்ளுபடிரூ2 ஆகும்.

**48.நிகழ்ச்சி நிரல்:** கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசை ஆகும். கூட்டத்தலைவருடன் கலந்துரையாடி நிறுமச் செயலர் நிகழ்ச்சி நிரலை தயார் செய்கிறார்.

**49.சிறப்புத் தீர்மானம் :** சிறப்புப் பொருள் குறித்து நிறைவேற்றப்பட வேண்டியது. 4ல் 3 பங்கு உறுப்பினர்கள் ஆதரித்து இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். கூட்டம் பற்றி தெரிவிக்கும் அறிவிக்கையில் இத்தீர்மானம் சிறப்புத் தீர்மானமாக நிறைவேற்றப்படும் என்ற விருப்பத்தை தெரிவித்திருக்க வேண்டும். கூட்டம் தொடங்க குறைந்தது 21 நாட்களுக்கு முன்னர் அறிவிக்கை அனுப்ப வேண்டும்

**50.ஒப்புறுதியளித்தல்:** பேரளவு விடுப்புகள் ஒப்புறுதியளித்தல் முறையிலேயே வெளியிடப்படுகின்றன. இந்த முறையில் ஒப்புறுதியர்கள் பொது மக்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் முழுவதுமாக எடுத்துக் கொள்ளப்படும் என வாக்குறுதியளிக்கின்றனர். அவ்வாறு பொது மக்களால் எடுத்துக்கொள்ளப் படாத பங்குகள் முழுவதையும் தாங்களே எடுத்துக் கொள்கின்றனர்.

**51.காளை (தெஜிவாலா) :** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர். இவர் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார். ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை உயரே அல்லது மேல் நோக்கி தூக்கி எறிவது போன்று, இந்த வகை ஊக வணிகர் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவதால் காளை எனப் பெயரை பெற்றுள்ளார்.

**52. கூட்டுறவு சிறப்பங்காடி 4 (எ-டு) :** காமதேனு – சென்னை . சிந்தாமணி – திருச்சி . கற்பகம் – வேலூர் பொன்னி - சேலம் பாண்டியன் சிறப்பங்காடி- மதுரை

**53. ஒரு நபர் ஒரு வாக்கு:** கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு. ஆளுக்கொரு வாக்கு என்ற சமத்துவ அடிப்படையில் மக்களாட்சி முறையில் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

**54.நாட்டுடைமையாக்கம் :** ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் அதாவது தனியாருக்குச் சொந்தமான தொழில் மற்றும் வாணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி அரசுத் தொழில்களாக அவை செயல்படுமாறு செய்யலாம்.

**55.அரசு நிறுமத்திற்கு எ.கா :** நிலக்கரி சுரங்க நிறுவனம், இந்திய எ.்.கு ஆணைய நிறுமம், இந்திய தொலைத்தொடர்பு துறை, அரசு போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம், அரசு மற்றும் மாநிலஅரசின் கூட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுமம் (டான்சி)

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56.இந்துகூட்டுக்குடும்பம்:**

**இந்தியாவில்இந்துகூட்டுக்குடும்பவணிகஅமைப்பு தலைசிறந்துவிளங்குகிறது.இதுஇந்தியாவில் மட்டுமேஉள்ளது.வியாபாரம்.கைத்தொழில்கள்சிறு தொழிற்ச்சாலைகள்போன்றவை.இந்துகூட்டுக்குடும்ப வியாபாரஅமைப்பின்குடும்பதலைமை உறுப்பினருக்கு கர்த்தாஎன்றுபெயர்**

2.**குடும்பதலைவர்மூலம்வியாபாரத்தைநடத்துவர்**

மிட்டக் சார சட்டத்தின் படி :

1.**ஒருகுடும்பத்திலுள்ளஆண்வாரிசுகள்மட்டுமே வம்சாவழிசொத்தில்உரிமையுள்ளவாகள்** .

2.**இச்சட்டம்அஸ்ஸாம்மற்றும்மேற்குவங்காளம்தவிர இந்தியாவில்பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது**.

3.தாயாபாகா சட்டத்தின் படி

1.**சொத்தின்உரிமைமாற்றம்கூட்டுவாரிசுதாரான் வாரிசு களுக்குவாரிசுஉரிமையின்படிஏற்படுவதாகும்.இது பிறப்பின்காரணமாகஅல்ல**.2.**கூட்டுவாரிசுதாரர்அவரது சொத்தின்பங்கைமற்றகூட்டுவாரிசுதாரரின்சம்மதமின் றிமாற்றித்தரஇயலும்**.

**57.கூட்டாண்மையில் இளவர் கூட்டாளி இளவர் என்பவர்** 18 **வயது பூர்த்தி அடையாதவர்**. **பாதுகாவலர் நியமிக்கப்பட்டால்** 21 **வயது வரை இளவராக கருதப்படுகிறார்**. **சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர்**. **எனவே அவர் கூட்டாளியாக முடியாது**. **ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும்**.

<u>உரிமை வயதை அடையும் முன் :</u>

1) **தொழிலின் சொத்திலும் இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை** 2) **நிறுவனக் கணக்குகளை பார்வையிட்டு அவற்றை நகல் எடுக்கும் உரிமை** 3) **தொழிலின் சொத்துகள் இலாபத்தில் அவருக்கு உள்ள பங்கு அளவிற்கு மட்டும் அவருக்குப் பொறுப்பு ஆகும்**. **அவரின்சொத்துகள்பொறுப்பாகாது**.

<u>உரிமை வயதை அடைந்த பின் :</u>

1) **உரிமை வயது அடைந்தபின்பு தொடாந்து கூட்டாளியாக இருக்க வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும்**. 2) **அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சோத்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார்**. 3) **ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால் அறிவித்த நாளிலிருந்து நிறுவனக்கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்**.

**58. தனி வரையறு நிறுமம் பொது வரையறு நிறுமம் வேறுபாடு :**

| அடிப்படை | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|
| உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப் பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாரித்த செயல் நடைமுறை விதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்க | செயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுமங்கள் நிறுமச்சட்டத்தில் |

| | | |
|---|---|---|
| | வேண்டும். | உள்ள மாதிரி அட்டவணை –அ பின்பற்ற வேண்டும். |
| குறுமப்பங் கொப்பம் | அவசியமில்லை | கட்டாயமாக்கப்பட்டுள்து |
| இயக்குநர் கள் | குறைந்தது 2 இயக்குநர்கள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்கள் தேவை |
| சட்ட முறை கூட்டம் | அவசியமில்லை | 6மாதத்திற்குள் கூட்ட வேண்டும். |
| தகுதிப்பங்கு கள் | இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட தகுதிப்பங்குகள் பெறவேண்டிய அவசியமில்லை | இயக்குநர்கள் தகுதிப்பங்குகளை பெற்றிட வேண்டும். |
| குறைவெண் | கூட்டம் செல்லத்தக்கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 |
| பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றலாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

**59. பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய முக்கிய நிபந்தனைகள்:** 1) நிறுமச் செயல்முறை விதிகள் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யும் அதிகாரத்தை நிறுமத்திற்கு வழங்கியிருக்க வேண்டும்.

2) அழைப்பு பணம் செலுத்த தவறியதால் மட்டுமே பங்குகளை பறிமுதல் செய்யலாம்.

3) பங்குநர்களிடமிருந்து பெற வேண்டியுள்ளது வேறு எக்கடன் நிலுவைக்காகவும் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யக்கூடாது.

4) அழைப்புப் பணம் செலுத்துமாறு பணம் செலுத்தத் தவறிய உறுப்பினர்களுக்கு குறைந்தது 14 நாள் அறிவிக்கையாவது தர வேண்டும்.

5) பங்குகளை ஒறுப்பிழப்பு செய்து அவை தீர்மானம் நிறைவேற்றிப் பங்குகள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். பங்குகளின் ஒறுப்பிழப்பிற்குப் பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர் உறுப்பினர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

**60.சட்டமுறை அறிக்கையில் காணப்பட வேண்டியவை:** 1. ரொக்கத்திற்கு மற்றும் ரொக்கத்திற்கன்றி வேறு மறுபயனுக்காக வெளியிடப்பட்டுள்ள பங்குகள் பற்றிய விவரங்கள். 2. பங்குகள் மீது பெற்ற மொத்த பணம் மற்றும் பிற வழிகளில் பெற்ற பணம். 3. அறிக்கை தயார் செய்வதற்கு 7 நாட்களுக்கு முன்புவரை பெற்ற பெறுதல் செலுத்தல் பற்றிய சுருக்கமான கணக்கு. 4. தொடக்கச் செலவுகள் குறித்த மதிப்பீடு அல்லது செலவழித்தவை. 5. கூட்ட ஒப்புதலுக்காக வைக்கப்பட வேண்டியுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் அவற்றில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்த விவரங்கள். 6. நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்களும் அதற்கான காரணங்களும். 7. பங்கு அல்லது கடனீட்டுப்பத்திர வெளியீட்டில் இயக்குநர்கட்கு செலுத்தியுள்ள அல்லது செலுத்த வேண்டியுள்ள கழிவு அல்லது தரகுத் தொகை.

8. இயக்குநர்கள் மேலாண்மை இயக்குநர்கள் மேலாளர் செயலர் ஆகியோர் குறித்த விவரங்கள். 9.இயக்குநர்கள் மேலாண்மை இயக்குநர்கள் முதலியோரிடமிருந்து இன்னும் பெற வேண்டிய அழைப்பு பணம் குறித்த விவரங்கள் இடம்பெற வேண்டும்.

**61. முதலீட்டார் ஊகவணிகா் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீகளின் மதிப்பை அதிகரிப்பதிலும் லாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள்தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக ?**

**இதுபேரளவுசில்லறைவியாபாரஅமைப்பு கூட்டுறவு அமைப்பில்தொடங்கப்படுவதுஇதில்விற்கப்படும் பொருட்கள்விலைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரேவிலைபேரம்பேசஇயலாது. வரைவிலக்கணம்: சில்லறைவிற்பனைசெய்யும்துறைவாரிஅமைப்புநான்குஅடிப்படைதுறைகளைக்கொண்டது.மளிகைப்பொருள்சுயசேவைப்பிரிவுமாமிசப்பால்பொருள்கள்மற்றும்வீட்டுஉபயோகப்பொருள்கள்விற்பனைசெய்யும்இடம்சலுகைஅடிப்படையில்துறைகளைகுத்தகைக்குநடத்தும் இடம்என்றுM.M.ஜிம்மாமென்வரையறுக்கிறார்.**

சிறப்பியல்புகள்

1. **பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.**
2. **பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்**
3. **சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை**
4. **பலதுறைகளைகொண்டது.**
5. **ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்**
6. **பொருட்களில்கலப்படம்தவிர்க்கப்படும் சரியானஅளவுஎடைகுறை நிலைஏற்படுவதில்லை.**

**8.அரிதானபொருட்கள்கூட விற்பனைசெய்யப்படும்.**

**63.துறைவாரி அமைப்பின் இயல்புகள்:** 1. **தேவைப்படும் நிதிமுழுவதையும் அரசே அளிக்கிறது.**

2.இது அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றது. இத்துறைக்கென அமைச்சர் உண்டு. இந்நிறுவன வளர்ச்சி இயக்கம் குறைபாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைகளுக்கும் பதில்சொல்லும்கடமைஅந்தஅமைச்சகத்திற்குஉண்டு.
3. இதில் செங்குத்து அதிகார உறவு காணப்படுகிறது.
4. இதற்கு தேவைப்படும் நிதி பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நிதி அறிக்கையின் மூலம் ஒதுக்கப்படுகிறது.
5. இதன் வரவு – செலவுத் திட்டம் அரசின் கணக்குப்பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும். 6. இது அரசின் பகுதி. எனவே அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெறுகிறது. அரசின் இசைவின்றி இந்நிறுவனங்களுக்கெதிராக வழக்கு தொடுக்க இயலாது

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: **4X20=80**

**64.அ)அமைப்பின் கோட்பாடுகளை விவரிக்க.**

**1.நோக்கங்களின் ஒருமை : அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.**
**2. வேலைப் பகிர்வு : அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். 3. கட்டுப்பாட்டு வீச்செல்லை : ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். 4. தரவரிசைக் கோட்பாடு : ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது "கட்டளை இணைப்பு" என்றும் அழைக்கப்படும். 5. கட்டளையொருமை : ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். 6. பணி வழி வரைவிலக்கணம் : ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். 7. ஒருமுனை இயக்கம் : ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். 8. ஒருங்கிணத்தல் : விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். 9. அதிகார ஒப்படைவு : ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.10. பொறுப்பு கோட்பாடு : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார்.**
**அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். 11. நெகிழ்வுத்தன்மை : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும்.**
**12. திறமை : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். 13.தனித்திறமை : அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே, பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது.**
**அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும்.**
**14. எளிமை : அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.**

**64.ஆ. பொதுகழகத்தின் இயல்புகள் :**

1.தனித்தியங்கும் சட்டத்தன்மை:
இது அதற்கென மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிசட்டத்தால் தோற்றுவிக்கப்படும்.

2.நீடித்த நிலைத்தன்மை:
இது நிறுமத்தைப்போன்று பொது முத்திரை மற்றும் நிலைத்தன்மையையும் பெற்றிருக்கும்.தனது பொது முத்திரையின் கீழ் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

3.அரசு முதலீடு:
அதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.சில பொது கழகங்களில் தனியார் முதலீடு செய்யப்படும் நிலையிருந்தால் குறைந்த பட்சம் 51 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும்.

4.நிதி தன்னாட்சியுரிமை:
ஆன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான நிதிக்காக இந் நிறுவனங்கள் அரசை சார்ந்திருப்பதில்லை.தேவைப்பட்டால் பொதுமக்களிடம் அல்லது அரசிடம் கடன் பெறலாம்.

5.நிர்வாகம்:

பொது கழகம் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.தகுதி திறமை அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

6.சேவை நோக்கம்:

இது லாப நோக்கு இல்லாமல் சேவை நோக்கை கொண்டு செயல்படும்.அதாவது சரக்கு அல்லது பணியிணை நியமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது.

7.பணியாளர்கள்:

பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்ல.அக்கழகமே அவர்களின் பணியமர்த்தல் சம்பளம் இன்ன பிறப் பணிகளை தீர்மானிக்கும்.

8.உரிமை மற்றும் கடமை:

இதைப்படைக்கும் சட்டமே உரிமைகள் கடமைகள் பொறுப்புகள் ஆகியவற்றை தெளிவாக முடிவு செய்யும்.

9.அரசு தலையீடின்மை:

இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடாது.சுதந்திரமாக தம் கொள்கைக் கழகங்கள் செயல்படுத்தலாம்.

10.தன்னாட்சியுரிமை:

இக்கழகங்களுக்கு நிதி மேலாண்மையில் தன்னாட்சியுரிமை உள்ளது.இயக்குநரவையால் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்காக இந்நிறுவனங்கள் தங்கள் நிதியினை பயன்படுத்தலாம்.

11.பதில் சொல்லும் கடமை:

இக்கழகங்களுக்கு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கும் அத் தொழில் சார்ந்த அமைச்சரகத்திற்கும் பதில் சொல்லும் படமை உண்டு.

12.தொழில்கடமை:

லாபம் ஈட்டுவது முதன்மை நோக்கம் இல்லாமலிருப்பினும் கழகங்கள் தொழில் கண்ணோட்டத்தோடு இயங்குகின்றன.

**பொதுக்கழகத்தின் நிறைகள்**

**அ.** அரசு நிதி **ஆ.** தன்னாட்சியுரிமை **இ.**நெகிழ்வுத் திறன் **ஈ.** அரசியல் தலையீடின்மை உ. பொது நலன் காத்தல் **ஊ.** வணிகக் கொள்கை **எ.** பொறுப்பு **ஏ.** சமுதாய சேவை நோக்கம் **ஐ.** நிர்வாகம்

**குறைகள் அ.** வரையறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமை **ஆ.** மாற்றங்கள் செய்வது கடினம் **இ.** தவறாக பயன்படுத்தும் உரிமை **ஈ.** திறமையின்மை **உ.** ஈடுபாடின்மை **ஊ.** அரசுக் கட்டுப்பாடு

**65.அ) தனிவணிகத்தின் நன்மைகள் ஏதேனும்10 :**

**1.நன்மைகள் : 1.எளிதான அமைப்பு :** தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுவுமின்றி துடங்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவையில்லை.

**2.நேரடி ஊக்குவிப்பு :** 1.வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியார் வணிகத்தைச் சாரும். எவருடன் ஒப்பிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

**3.நெகிழ்ச்சி தன்மை :** தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். தனியாள் வணிகத்தை மாற்ற எவ்வித செலவுகள் இல்லாமலும் எளிதில் மாற்றிக்கொள்ளலாம்.

**4.வியாபார ரகசியங்களை காத்தல் :** வியாபார வெற்றிக்கு தொழில் ரகசியங்களை காத்தல் அவசியம். தனியாள் வணிகத்தில் ஒருவர் மட்டும் என்பதால் வியாபார ரகசியங்களை காக்க இயலும். **5.விரைவான முடிவு :** தனியாள் வணிகத்தில் ஒருவர் வேறுஉரிமையாளர் இல்லை எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவெடுக்கலாம்

**6.அதிக வெகுமதி :** தனியாள் வணிகத்தில் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத்தவரினால் நட்டம் பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகளை தனியாள் வணிகருக்கு சாரும். **7.அதிக நிதி தரமதிப்பீடு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சொந்த சொத்துகளில் இருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.அதனால் பலர் கடன் தரமுன்வருவார்.

**8.சுய வேலைவாய்ப்பு :** குறைந்த மூலதன முடைய பலருக்கும் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. அடிமைத்தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

**9.ஆளுமை வளர்ச்சி :** தன்னம்பிக்கை தொழில் தொடங்கும் முயர்சி பொறுப்புணர்ச்சி சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்றவை வளர்கிறது.

**10.எளிமையாக கலைப்பு :** .கலைப்பது மிகவும் எளிது. விரும்பிய போது எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லாமல் கலைக்கலாம்.

**65.ஆ.பங்கு மாற்றகத்தின் நன்மைகள்:**

**நிறுமத்திற்கு நன்மைகள்**: 1. **பங்கு மாற்றகம் கையாளும் பங்குகளுக்குரிய நிறுமங்களின் மதிப்பு உயரும்**. **நிறுமம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும்**. 2. **நிறுமங்களின் பங்குகளுக்கு பரந்த சந்தை கிடைக்கிறது**. 3. **நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்போது சாதகமான பேரத்தை பெற உதவி செய்கிறது**. 4. **ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின்**

**விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் குறைகின்றன**.

**முதலீட்டாளருக்கு நன்மைகள்**:

1. **முதலீட்டாளர்கள் தம் விருப்பம்போல் பத்திரங்களை வாங்க விற்க ஆயத்த சந்தையாக விளங்குகின்றன**.

2. **பத்திரங்களுக்கான நிலையான சந்தையையும் முதலீடுகளுக்கான நீர்மைத் தன்மையையும் அளிக்கின்றது**. 3. **பங்கு மாற்றகங்களில் வாணிகம் செய்யப்படும் பத்திரம் கடன்பெற நல்ல பிணையமாக ஏற்கப்படுகின்றன**. 4. **பத்திர மதிப்பு விலைப்புள்ளியாக வெளியிடப்படுவதால் முதலீட்டின் நடப்பு உண்மை மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது**.

**சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள்:**

1. **பெருமளவு மூலதன உருவாக்கம் செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.** 2. **பத்திர விற்பனையை ஊக்கப்படுத்தி சிறப்பாக மேலாண்மை செய்யப்படும்நிறுமங்களின் நிலையை உயர்த்துகின்றன.**

3. **அரசு நிதியை மக்களிடம் கடனாக பெறஇ நாட்டின் முக்கிய வளர்ச்சி திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன.** 4. **நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாக பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன்.**

## பங்கு மாற்றகங்களின் குறைபாடுகள்:

1. **அமைப்பு முறை சீராக கட்டுப்பாடோடு இல்லை.**
2. **உறுப்பினருக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி நிர்ணயிக்கப்படவில்லை. உறுப்பினராக கட்டுப்பாடுகள் ஏதுமில்லை.**
3. **விரும்பத்தகாத ஆரோக்கியமற்ற ஊக வாணிகத்தை கட்டுப்படுத்த தவறியிருக்கிறது.**
4. **பட்டியலிடப்படுவதற்குச் சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.**
5. **சில நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குமாற்றகங்கள் செயல்படுகின்றன.**

**66)அ) கூட்டாளிகளின் உரிமைகள்** 1. **ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும் மேலாண்மையில் பங்கேற்கவும் உரிமை உண்டு.** 2. **ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தம் கருத்தை தெரிவிக்க உரிமை உண்டு.** 3. **முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும் எனக் கோருவதற்கு உரிமை உண்டு** 4. **ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன ஏடுகளையும், கணக்குகளையும் கண்காணித்து நகலெடுக்கும் உரிமை உண்டு.**

5. **ஒவ்வொரு கூட்டாளிக்கும் இலாபத்தில் சமபங்கேற்க உரிமை உண்டு.** 6. **தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது** 6% **வட்டி பெற உரிமைஉண்டு.** 7. **அன்றாட வியாபாரத்தில் தாம் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமை உண்டு 8. தொழிலுக்காக நிறுவன சொத்துக்களை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 9. ஒப்புதல் இன்றி புதிய கூட்டாளிகளை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 10. நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற உரிமை உண்டு.**

**கூட்டாளியின் கடமைகள் அனைத்து கூட்டாண்மைக்கும் பொருந்தும், உடன்பாட்டால் மாற்றமுடியாத சட்டத்தால் நிரந்தரமாக கொடுக்கப்பட்ட கடமைகளே முழுமையான கடமைகள்** : 1) **ஒவ்வொரு கூட்டாளியும் தன் கடமைகளை கவனக்குறைவின்றியும், நாணயமாகவும், அனைத்து கூட்டாளிகளின் நலனுக்காகவும் நிறைவேற்ற வேண்டும்.** 2)**ஒவ்வொரு கூட்டாளியும் ஏனைய கூட்டாளிகளிடம் விசுவாசமாகவும், உண்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.** 3) **தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயல்பட வேண்டும்.** 4) **வேறு வகையில் உடன்பாடு இல்லாத போது நிறுவன நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவர்.** 5) **தொழில் நடவடிக்கையில் தான் அறிந்து செய்த தவறினால் ஏற்பட்ட நட்டத்துக்கு நிறுவனத்திற்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும்.** 6) **பிற கூட்டாளிகளின் இசைவின்றி தன் பங்கை பிறருக்கு மாற்றக் கூடாது.** 7) **நிறுவன தொழில் சார்ந்த கணக்குகளை உண்மையாகவும், சரியாகவும் வைத்திருக்க வேண்டும்.** 8) **கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக எத்தொழிலையும் போட்டியாக கூட்டாளி நடத்தக்கூடாது.** 9) **நிறுவன சொத்துக்களை நிறுவன நலனுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.** 10) **எக்கூட்டாளியும் இரகசிய லாபங்களை ஈட்டக்கூடாது.**

**66.ஆ)பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடு :**

| அடிப்படை | பங்குகள் | கடனீட்டுப்பத்திரங்கள் |
|---|---|---|
| பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்த கடனை உறுதிபடுத்தும் சான்றாகும்கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனாளர்ஆகிறார் |
| இலாபத்தை வழங்குதல் | போதுமா லாபம் ஈட்டினால் மட்டுமே பங்குனர் கட்குபங்காதாம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது.இயக்குநர் முடிவால்இதனை மாற்ற முடியாது |
| இலாபத்தின் அளவு | முற்றுரிமை பங்கட்கு குறிபிட்ட விதத்தில் நிலையான பங்காதயம் ஆனால் நேர்மை பங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாய விகிதம் லாபத்திற்கேற்ப மாறக்கூடியது | குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவை ஒட்டி வட்டிவீதம் மாறாது. |
| இயக்குநர் ஒப்புதல் | லாபம் ஈட்டுறுப்பினும் இயக்கநர்அவை பரிந்துறைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துறையும் ஒப்பதலும் வேண்டியதில்லை |
| லாபத்தை வழங்குதல் | பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திரவட்டி லாபத்தின் மீதான செலவாகும். |
| பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே | ஆத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |

| | | |
|---|---|---|
| | ஆகும். | |
| வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம் பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | கடனீட்டபத்திரங்களைவட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை |
| சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |

**67)அ)நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :**

1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தணுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உரிய முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்

2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய

3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய

4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.

5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.

2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

**67.ஆ)**

| **கூட்டுப் பங்கு நிறுமம்** | **கூட்டுறவு சங்கங்கள்** |
|---|---|
| இலாப நோக்கோடு பலர் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் தொழில்- | பாதிக்கப்பட்டோர் தங்கள் பொருளாதார நலனை மேம்படுத்த ஒன்றிணைந்து மேற்கொள்வது |
| குறைந்த அளவுதனி நிறுமம் 2 நபர்கள்,பொது நிறுமம் 7 நபர்கள்<br>அதிக அளவு தனி நிறுமம் 50, பொது நிறுமம் எல்லை இல்லை. | கூட்டுறவில் குறைந்தது 25 நபர்கள்<br>அதிக அளவு எல்லை இல்லை. |
| எப்பகுதியில் வாழ்பவரும் பங்கு வாங்கி உறுப்பினராகலாம். | குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்கள் மட்டுமே |
| இந்திய நிறும சட்டம் 1956ன் படி பதிவு செய்யப்பட வேண்டும். | மாநில அரசு கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் |
| நிறுமத்தில் பங்குநர்கள் எவ்வளவு பங்குகள் வேண்டுமானாலும் வாங்கலாம். | உறுப்பினர்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் பங்குகள் வாங்க அனுமதி இல்லை. |
| நிறுமத்திற்கு அரசின் சலுகைகள் ஏதுமில்லை | பதிவுக் கட்டண சலுகை, வருமான வரி சலுகை என பல சலுகைகளை அரசுஅளிக்கிறது. |
| நிறுமம் முதலாளித்துவ அமைப்பு. எனவே அதிக இலாபமடைய மக்களை சுரண்டும். | தமக்காக தாமே அமைக்கப்படுவதால் சுரண்டல் என்ற பேச்சுக்கே இடமில்லை |
| மனிதனை விட பணத்திற்கே முக்கியத்துவம் | பணத்தைவிட மனிதனுக்கே முக்கியத்துவம் |
| பங்குகள்முகமதிப்பிலோ, முனைமத்திலோ, வட்டத்திலோ வெளியிடலாம். | பங்குகள் முகமதிப்பில் மட்டுமே வெளியிடப்படும் . |
| ‘ஒரு பங்கு ஒரு வாக்கு’ முறை | ‘ஒரு நபர் ஒரு வாக்கு’ முறை |

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com